DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate  At Oddanchatram

Case No : CC 219/2023

List of Witness : Lw1

Prosecution Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | நாட்டுத்துரை | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | செல்லமுத்து | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :-   12/03/2026

(எதிரி ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது கேரளாவில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் கடையில் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 10.09.2022 ஆம் தேதி அம்பிளிக்கை காவல்நிலையத்தில் இருந்து எனக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனது அப்பா செல்லமுத்து விபத்து ஏற்பட்டதாக ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்து இருப்பதாக கூறினார்கள். நாங்கள் ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம். அங்கிருந்து அவரை கோவைக்கு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். மீண்டும் ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தோம். கார் வந்து மோதிவிட்டதாக சொன்னார்கள். விபத்து எவ்வாறு நடந்தது என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள புகார்தாரர் கையொப்பம் என்னுடையது தான். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பு சாட்சி  கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன் என்றால் ஆமாம். சமாதானமாக சென்றுவிட்டேன். கடந்த 10.09.2022 ஆம் தேதி காலை 11.30 மணிக்கு எனது அப்பா செல்லமுத்து

அவருக்கு சொந்தமான TN 57 P 4053 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் தாராபுரம் டூ ஒட்டன்சத்திரம் நான்கு வழிச்சாலையில் வீரமுத்து சாலை பேருந்து நிறுத்தம் அருகே வடக்கே இருந்து தெற்கு நோக்கி வந்து வலதுபுறம் ரோட்டை கடக்க முயன்ற போது அவருக்கு பின்னால் வந்த TN 39 CP 7979 பதிவெண் கொண்ட காரை ஆஜர் எதிரி சந்தோஷ் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து செல்லமுத்து ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றும் அதில் செல்லமுத்துவிற்கு பின் தலை, இடது கால், வலது கால் தொடைகளில் பலத்த காயங்கள் ஏற்பட்டது என்றும், அவருக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த நானும், செல்வக்குமாரும் சம்பவத்தை நேரில் பார்த்தோம் என்றும், 108 ஆம்புலன்ஸ் மூலம் ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம் என்றும், சிகிச்சையில் இருந்தபோது அம்பிளிக்கை போலீசார் வந்து விசாரணை செய்தார்கள் என்றும், அவர்களிடம் நான் சம்பவம் தொடர்பாக புகார் வாக்குமூலம் அளித்தேன் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டபடியால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.03.12 17:20:54 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 12/03/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 219/2023

List of Witness : Lw2

Prosecution Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | செல்வக்குமார் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | வேலுச்சாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 12/03/2026

(எதிரி ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது தாராபுரம் பட்டுத்துறையில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 10.09.2022 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு எனது நண்பர் நாட்டுத்துரை எனக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவரது அப்பா செல்லமுத்துவிற்கு விபத்து ஏற்பட்டதாக கூறி வரும்படி சொன்னார். ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்துவிட்டு அவரை மேல்சிகிச்சைக்காக கோயம்புத்தூருக்கு கொண்டு செல்லலாம் என்று செல்லும் வழியில் அவர் இறந்துவிட்டார். மீண்டும் ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்துவிட்டோம். விபத்து எவ்வாறு நடந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.1 எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன் என்று என்னிடம் சொன்னாரா என்றால் ஆமாம். சொன்னார். கடந்த 10.09.2022 ஆம் தேதி காலை 11.30 மணிக்கு அ.சா.1ன் அப்பா செல்லமுத்து அவருக்கு சொந்தமான TN 57 P 4053 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் தாராபுரம் டூ ஒட்டன்சத்திரம் நான்கு வழிச்சாலையில் வீரமுத்து சாலை பேருந்து நிறுத்தம் அருகே வடக்கே இருந்து தெற்கு நோக்கி வந்து வலதுபுறம்

ரோட்டை கடக்க முயன்ற போது அவருக்கு பின்னால் வந்த TN 39 CP 7979 பதிவெண் கொண்ட காரை ஆஜர் எதிரி சந்தோஷ் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து செல்லமுத்து ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றும் அதில் செல்லமுத்துவிற்கு பின் தலை, இடது கால், வலது கால் தொடைகளில் பலத்த காயங்கள் ஏற்பட்டது என்றும், அவருக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த நானும், அ.சா.1ம் சம்பவத்தை நேரில் பார்த்தோம் என்றும், 108 ஆம்புலன்ஸ் மூலம் ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம் என்றும், சிகிச்சையில் இருந்தபோது அம்பிளிக்கை போலீசார் வந்து விசாரணை செய்தார்கள் என்றும், அவர்களிடம் அ.சா.1 சம்பவம் தொடர்பாக புகார் வாக்குமூலம் அளித்தார் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டபடியால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.03.12 17:21:02 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 12/03/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 219/2023

List of Witness : Lw3

Prosecution Witness : PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பழனிச்சாமி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | பழனியப்பன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 12/03/2026

(எதிரி ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் ஒட்டன்சத்திரம் காந்தி நகரில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் ஒர்க் ஷாப்பில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 10.09.2022 ஆம் தேதி மாலை 3.00 மணியளவில் அம்பிளிக்கை வீரமுத்து சாலை அருகே நடந்த விபத்து தொடர்பாக அம்பிளிக்கை போலீசார் விசாரணை செய்து படம் வரைந்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள். நான் சாட்சியாக கையொப்பம் செய்து கொடுத்தேன். பார்வை மகசர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

அ.சா.ஆ.2 ல் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.03.12 17:21:09 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 12/03/2026